# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Civil Procedure)

## <u>அசல் வழக்கு எண்.1190/2008</u>

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ம் நாள் வா.த.சா. 1.

அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சம்பாளம்மாள் | வயது | : | |
| க/பெ. | : | திரு.சாரங்கபாணி | இனம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| சமயம் | : | | தாலுக்கா | : | |

**<u>வா.த.சா.1- குறுக்கு விசாரணை</u>**

என் பெயர் செம்பாளம்மாள் என்றால் சரிதான், சம்பாளம்மாள் இல்லை. நான் வாங்கிய இடத்தை புரம்போக்கு நிலத்திற்குரியதால் வழக்கை தாக்கல் செய்தேன். நான் வாங்கிய இடத்தின் சர்வே எண் ஞாபகத்தில் இல்லை. அதன் அளவுகளும் ஞாபகமில்லை. இந்த இடத்தை வாங்கும் போது வீடு இருந்தது. தற்போதும் வீடு உள்ளது. வழக்கு சொத்தில் வீடு உள்ளது என்று பிரமாண வாக்குமூலத்திலோ பிராதிலோ குறிப்பிடவில்லை என்றால் நான் அதை மறுக்கிறேன். நான் வசிக்கும் கிராமத்தில் ஏற்கனவே எனக்கு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழங்கப்பட்ட பட்டாவிவ் உள்ள புல எண் 67/2 என்றால் சரிதான். ஏற்கனவே பட்டா வழங்கப்பட்ட நிலையில் எதற்காக புதுப்பட்டா கேட்கிறேன் என்றால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சண்டை போட்டதால் நான் கேட்கிறேன். அதே போல் எனது மகளுக்கும் அரசு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வீடு உள்ளதாக குறியிருக்கும் பட்சத்தில் அதற்கான ஆவணமான வீட்டு வரி ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யதுள்ளேன்.

ஏற்கனவே பட்டா வழங்கப்பட்ட நிலையில் புது பட்டா கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் நான் அதை மறுக்கிறேன். பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள அளவுகள் தவறானவை என்றால் அதை நான் மறுக்கிறேன். நான் குறிப்பிட்ட அளவிற்கும், வழக்கு சொத்தில் உள்ள அளவிற்கும் சம்மந்தமில்லை என்றால் நான் அதை மறுக்கிறேன்.

நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். நான் 2004-ல் தாக்கல் செய்த வழக்கை ஒரு மாத காலத்திற்குள் உரிமையியல் நீதிமன்றத்தை அனுகி பரிகாரம் கேட்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒரு மாதம் காலத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் அதை மறுக்கிறேன். என்னிடம் காட்டப்படம் வா.த.சா.ஆ-16 கிரைய ஆவணத்தின் ஜக்பந்தி விவரத்தில் வடக்கு பக்கத்தில் செம்பாளம்மாளின் காலி மனை என்று தான் குறிப்பிட்டுள்ளது. அந்த இடம் தான் இந்த வழக்கின் சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன இந்த ஆவணத்தில் கூட காலி மனை தான் என்று குறிப்பிட்டுள்ளதால் வீடு கட்டி இருப்பதாக கூறியுள்ள விவரங்கள் தவறு என்றால் நான் அதை மறுக்கிறேன். என்னால் அனுப்பப்பட்ட எனது தரப்பு ஆவணமான வா.த.சா.ஆ-22-ல் அறிவிப்பில் உள்ள குறிப்பிட்டிருக்கும் அளவுகள் தவறானவை என்றால் நான் அதை மறுக்கிறேன். இந்த வழக்கு இல்லாது எட்டியப்பன் மற்றும் எனது பெயரில் வேறொரு வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் அனுபவமில்லாமல் பட்டா கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் நான் அதை மறுக்கிறேன். ஏற்கனவே பட்டா வழங்கப்பட்ட நிலையில் மறுபடியும் பட்டா கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு கோப்பில் உள்ள அளவுகள் தவறானவை என்பதால் வழக்கு தாக்கல் செய்ய எந்த முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை